SECONDARY SCHOOL

END - OF - YEAR EXAMINATION - 2017

TAMIL LANGUAGE PAPER

SECONDARY 3 EXPRESS / 3NA

குறிப்புகள் :

1. ஒவ்வொரு வினாத் தொகுதியின் தொடக்கத்திலுள்ள குறிப்புகளைப் படித்துப் புரிந்துகொண்டு அதன்படி வினாக்களுக்கு விடை எழுத வேண்டும்.

2. விடைகள் அனைத்தையும் கொடுக்கப்பட்டுள்ள விடைத் தாளிலேயே எழுத வேண்டும்.

பெயர் : ____________________

வகுப்பு : ____________________

மதிப்பெண்கள் : / 70

இவ்வினாத்தாளில் அடங்கியுள்ள வினாக்கள் பக்கம் 2 முதல் 9 வரை அச்சிடப் பட்டுள்ளன. கடைசி வினாவின் கீழ் 'முற்றும்' என்னும் சொல் காணப்படும்.

**SECONDARY 3 EXPRESS**

**SECONDARY 3 SET 3 /15**

More papers at www.testpapersfree.com

மார்ச் விடுமுறை வீட்டுப்பாடம்
உயர்நிலை 3விரைவு

A1 இணைமொழி / மரபுத்தொடர்கள் (10 மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற சொற்றொடர்கள் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப் பொருத்தமான சொற்றொடரைத் தேர்ந்தெடுத்துக் கோடிட்ட இடத்தில் எழுதுக.

Q1. வெளிநாட்டில் பல ஆண்டுகள் இருந்து திரும்பிய வெங்கடராமனை அவனுடைய உறவினர்கள் ____________ மலர வரவேற்றனர்.

Q2. உறுப்பினர்கள் சிலருடைய அகம்பாவமான மனநிலையால் நற்பணிமன்றம் இன்று ____________.

Q3. ஒருவர் பேசும்போது வேறொருவர் இடையில் ____________ நாகரிகமற்ற செயல் ஆகும்.

Q4. பொறுப்பற்ற பாலசுப்பிரணியம் எந்தச் செயலை யார் செய்யச் சொன்னாலும் ____________ முடியாது என்று சொல்வதை வழக்கமாக வைத்துள்ளான்.

Q5. தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் நம் நாட்டின் ____________ இன்றைய இளையர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்.

1. தலையெடுப்பதை
2. அகமும் புறமும்
3. எடுத்த எடுப்பிலேயே
4. கண்டதும் கேட்டதுமே
5. சீரும் சிறப்பும்
6. அருமை பெருமையை
7. இடங்கொடுத்தது
8. இரண்டுபட்டது
9. உள்ளும் புறமும்
10. தலையிடுவது

SECONDARY 3
EXPRESS



More papers at www.testpapersfree.com

A2 வாக்கியத்தை முடித்தெழுதுதல் (10 மதிப்பெண்கள்)

பின்வரும் வாக்கியங்களைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு முடித்துக்காட்டுக. அவ்வாறு முடிக்கப்பெறும் வாக்கியங்கள் ஒவ்வொன்றும் அதற்கு முந்திய வாக்கியத்தின் கருத்தையே கொண்டிருக்க வேண்டும்.

Q6. தண்ணீர்ப் பிரச்சனையைச் சமாளிக்க நம் அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

தண்ணீர்ப் பிரச்சனையைச் சமாளிக்க நம் அரசாங்கத்தால் ______________

______________________________________________.

Q7. விளையாட்டு வீரர்களின் கடின முயற்சிகளும் பயிற்சிகளுமே அவர்களின் வெற்றிக்கு வழிகோலுகின்றன.

கடின முயற்சிகளும் பயிற்சிகளும் இருந்தாலொழிய ______________

______________________________________________.

Q8. வேலைவாய்ப்புகளை இழக்காமலிருக்க வேண்டுமென்றால் தங்கள் திறனை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் என்று ஊழியர்கள் எண்ணுகிறார்கள்.

வேலைவாய்ப்புகளை இழக்காமலிருக்க வேண்டுமென்றால் தங்கள் திறனை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் என்பது ______________

______________________________________________.

Q9. தங்கள் பிள்ளைகள் தீவிரவாதி ஒருவனால் சுட்டுக்கொல்லப்பட்டதால் நார்வேயில் பெற்றோர் மனம் உடைந்து கண்கலங்கினர்.

நார்வேயில் பெற்றோர் மனம் உடைந்து கண்கலங்க ______________

______________________________________________.

Q10. ஆபத்துக் காலத்தில் கைவிட்டுச் சென்ற கோவிந்தனின் செயலால் அரவிந்தன் உள்ளம் வாடினான்.

ஆபத்துக் காலத்தில் கைவிட்டுச் சென்ற கோவிந்தனின் செயல் ______________

______________________________________________.



More papers at www.testpapersfree.com

A3 அமைப்புச் சொற்கள் (10 மதிப்பெண்கள்)

கீழ்வரும் பகுதியில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற அமைப்புச் சொற்கள் பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப் பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

சிங்கப்பூரைச் சேர்ந்த பெண்கள் குழு ஒன்று எவரெஸ்ட் உச்சியைத் தொடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இக்குழு நேப்பாளத்திலுள்ள மேரா என்னும் மலையில் அதற்கான பயிற்சியை மேற்கொண்டிருக்கின்றது. பனி நிறைந்த Q11.________ ________ பயிற்சி பெறுவதற்குச் சிறந்த இடம் என்பதால் இக்குழுவினர் அதைத் தெரிவு செய்திருக்கின்றனர். ஆனால், அங்கு நிலவும் கடுமையான பருவநிலை இக்குழுவுக்கு Q12.________________ உள்ளது. இருந்தபோதும், அண்மைக் காலத்தில் பெண்கள் பல்வேறு Q13.____ ________ சாதனை புரிந்திருப்பது இக்குழுவுக்குத் தன்னம்பிக்கையை அளிக்கிறது.

சில ஆண்டுகளுக்கு முன் ஆண்கள் குழு ஒன்று எவரெஸ்ட் உச்சியைத் தொடும் சாதனையில் ஈடுபட்டு வெற்றி கண்டதும் நாம் அறிந்ததே. அக்குழுவினர் தாங்கள் Q14.________ ________ சவால்களையும் அனுபவங்களையும் இப்பெண்கள் குழுவிடம் பரிமாறிக் கொண்டனர். நேப்பாளத்தில் பயிற்சி முடித்த பிறகு, இக்குழு சீனா சென்று அங்கு பனிக்கட்டிகளில் ஏறுவதற்கான பயிற்சியை Q15.______ ________. எவ்ரெஸ்டின் சிகரத்தைத் தொட்ட முதல் பெண்கள் குழு என்னும் பெயரைப் பெறவே நம் நாட்டின் பெண்கள் குழு கடுமையான உழைப்பினை மேற்கொண்டு வருகிறது.

1. இடத்தில்
2. சந்தித்த
3. தடையாக
4. வேலைகளில்
5. அடையவிருக்கிறது
6. சவாலாக
7. பெறவிருக்கிறது
8. சூழலில்
9. எதிர்த்த
10. துறைகளில்



More papers at www.testpapersfree.com

'ஆ' பிரிவு

B4. தெரிவுவிடைக் கருத்தறிதல் (10மதிப்பெண்கள்)

பின்வரும் கட்டுரைப் பகுதிகளைக் கருத்தூன்றிப் படித்து, அவற்றின் அடியில் காணும் வினாக்களுக்கு விடை எழுதவும்

வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் நான்கு தெரிவுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை மட்டும் அடைப்பினுள் எழுதவும்.

பகுதி 1

நமது வாழ்க்கை, இளவயதில் விளையாட்டிலும் தாய் தந்தையரின் பாதுகாப்பிலும் ஆனந்தமான சூழ்நிலையிலும் தொடங்குகிறது. துன்பம் என்பதின் அடிச்சுவட்டைச் சிறிதும் காணாத சுகமான பருவமாக விளங்குகிறது. மேற்குறிப்பிட்டவற்றுள் பெற்றோரின் பாதுகாப்புதான் தலைசிறந்த இன்பத்தை வாரி வழங்குகிறது. பள்ளியில் படிக்கத் தொடங்கும்போது நமது எதிர்காலம் பற்றிய கற்பனையில் மூழ்கித் தடைகளை எல்லாம் தாண்டுகிறோம். திருமணம் செய்து கொள்ளும் போதோ சொர்க்கமே பூமிக்கு இறங்கிவந்துவிட்டதாக நம்புகிறோம். அதன்பின் வேலையில் சேர்ந்து குழந்தை குட்டிகள், உலகம் என்று விரியும்போது பல சமயம் நம்மால் சமாளிக்க முடிவதில்லை. துன்பங்கள் வந்து சேர்கின்றன. வாழ்வில் தோல்விகளைச் சந்திக்கிறோம். அதன்பின் பார்த்தால் ஒன்று மாற்றி ஒன்றாக ஏமாற்றம், துக்கம், தோல்வி, அசாதாரண ஆசைகள் எனப் பல தோன்றுகின்றன. அவை நிறைவேறாதபோது பல நிலைகளிலும் துவண்டும் மனம் நொந்தும் போகிறோம்.

கவலைப்படுவதை நிறுத்த வேண்டும் என்பர் பெரியோர். ஆசைதான் எல்லாக் கவலைகளுக்கும் காரணம் என்றும் பெரியோர் கூறுவர். வாழ்க்கை எங்கிருந்தாலும் அப்படித்தான் இருக்கும். அமெரிக்கா போனால் வாழ்க்கையில் உள்ள கவலைகள் போய்விடாது. மனத்தைப் பொறுத்ததுதான் கவலை. சிலர் சிறிய கவலையை இமயமலையாகக் கருதுவர். சிலர் பெரிய கவலையைக் கூட கடுகாகக் கருதுவர். இப்படிப்பட்டவர்களை பெரியோர் பெரிதும் போற்றுவர். ஆகவே அவரவர் மனத்தைப் பொறுத்ததே கவலை.

வினாக்கள்

Q16. இளம் பருவம் சுகமான பருவமாக எப்போது அமையாமல் போகும்?

1. துன்பச்சுமை அதிகரிக்கும்போது
2. மகிழ்ச்சியான சூழ்நிலை அமையாதபோது
3. பெற்றோரின் பாதுகாப்பு இல்லாதபோது
4. இளவயதில் விளையாட்டில் ஈடுபடாதபோது ( )

Q17. வாழ்வில் தோல்விகளைச் சந்திப்பது எப்போது தொடங்குகிறது?

1. கற்பனையில் மூழ்கும்போது
2. பெற்றோரின் பாதுகாப்பு குறையும்போது
3. அலுவலகத்தில் வேலைசெய்யும்போது
4. மண வாழ்க்கையைத் தொடங்கிய பின்பு ( )



More papers at www.testpapersfree.com

Q18. கவலைக்கு மருந்து யாது என்று பெரியோர் கூறுகின்றனர்?

1. கவலையைக் கடுகாக நினைப்பது
2. அமெரிக்காவிற்குச் செல்வது
3. ஆசைகள் அதிகம் படுவது
4. இமயமலையாக நினைப்பது ( )

<u>பகுதி 2</u>

ஒரு நாணயத்துக்கு இரு பக்கங்கள் இருப்பது போல நம் வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் மாறி மாறி வருவது இயற்கை. ஒருவர் தம் வாழ்க்கையில் இன்பம் நிறைந்திடவும் துன்பம் குறைந்திடவும் விழைந்தால் அவரிடம் இருக்க வேண்டிய அத்தியாவசியப் பொருள்களுள் ஒன்று பணம். 'பணம் இல்லாதவன் பிணம்' என்பது ஒரு பழமொழி. வாழ்க்கையின் தேவைகளை நிறைவேற்றப் பணம் இன்றியமையாததாகும் என்பதை நாம் நன்கு அறிவோம். பணம் இல்லாதவனை எல்லாரும் இகழ்வர், இருப்பவனைப் புகழ்வர் என்ற பொருளைக் கொண்ட தம் குறள்வழி திருவள்ளுவரும் பணத்தின் அருமையை மக்களுக்கு உணர்த்தியுள்ளார்.

அப்பணத்தைச் சம்பாதிப்பதற்குப் பல வழிகள் உண்டு. ஆனால், அதைத் தீய வழிகளில் ஈட்டுவதை விடுத்து முறையான வாழ்வை நடத்த ஒவ்வொருவரும் தேவையான பணத்தை நேரிய முறையில் ஈட்டவேண்டும். உடலுழைப்பு, நேர்மையான வாணிகம், தொழில் முறைகள் என்று பல்வேறு வகைகளால் பொருளீட்டும் முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

Q19 வாழ்க்கைக்குப் பணம் ஏன் அவசியம்?

1. வாழ்க்கையில் இன்பத்தை அடைய
2. மற்றவர்கள் நம்மைப் புகழ
3. மற்றவர்களின் தேவைகளை நிறைவேற்ற
4. வாழ்க்கையின் தேவைகளைப் பூர்த்திச் செய்ய ( )

Q20. பணம் சம்பாதிக்க எவ்வழி சிறந்தது?

1. நேர்மையான வழி
2. எந்தத் தொழிலும் செய்யும் வழி
3. வாணிகம் செய்யும் வழி
4. உடலுழைப்பு இல்லாத வழி ( )



More papers at www.testpapersfree.com

## "இ" பிரிவு

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு உம் சொந்த நடையில் விடை தருக. (30 மதிப்பெண்கள்)

பழக்கவழக்கம் என்பது உலகம் முழுமைக்கும் உரியது. ஒன்றின் அடிப்படையில் எழுந்த செயலான இது, பழக்கமாக உருப்பெற்று உலகில் நிலையான வழக்கமாக ஆகிப்போனதைக் குறிக்கிறது. இது நாட்டுக்கு நாடு, இடத்திற்கு இடம் வேறுபடும். மனிதனால் மனித சமுதாயத்திற்கு மிகவும் தேவையான பழக்க வழக்கங்களும் அறிவுக்குத் தேவையில்லாத அறிவுக்கு முற்றிலும் பொருந்தாத பழக்கவழக்கங்களும் வழிவழியாகப் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. ஒரு நாட்டின் கலாச்சாரம் என்பது அங்குள்ள இயற்கைச் சூழல், மொழி, மதம், நாகரிகம் ஆகியவற்றின் அடிப்படையில் அமையப்பெறுவதேயாகும். 'காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு' என்பதைப் போலவே அவரவர்களின் கலாச்சாரம் அவரவர்களுக்குப் பெருமையுடையதே.

உலகம் முழுவதையும் சுற்றி வந்தவர்களிடம் 'எந்த நாடு உங்களுக்குப் பிடிக்கும்' என்ற ஒரு கேள்வியினை முன்வைத்தால், அவர்களின் பதில் நிச்சயம் இப்படித்தான் அமையும். "எனக்குச் சொர்க்கம்கூட வேண்டாம். ஜப்பான் நாட்டில் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்தால் போதும்" என்றே கூறுவார்கள். அவர்களின் புன்னகையைப்பற்றிக் கூடக் கதைகள் பல நிலவுகின்றன. "அவர்கள் உள்ளத்தில் உள்ளதைக் கண்டுபிடிக்க முடியாமல் மறைக்கின்ற சுவர் அந்தப் புன்சிரிப்பே" என்பார்கள்.

மனித அறிவு விசாலமானது என்றாலும் அவற்றுள் பண்பாடுமிக்கச் செய்கையான 'வணக்கம்' தெரிவித்தலே முதன்மையானதாக அமைகிறதெனலாம். ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு மனித இனப் பிரிவுகளிலும் வணக்கம் செலுத்தும்முறை வேறுபடும். மனிதர்கள் ஒருவருக்கொருவர் தங்கள் அன்பையும் நன்றியினையும் மற்றவர்களிடம் வெளிக்காட்டிக் கொள்ளுதலே வணங்குவதற்குரிய பண்பு. ஜப்பானியர்களின் வழக்கம் இதிலும் ஒரு பணிவையும், நளினத்தையும் அடக்கத்தையும் பிரதிபலிக்கிறது. 'நின்றபடியே சற்றுப் பின்னால் நகர்ந்து கைகளை இரண்டு பக்கங்களிலும் சேர்த்து வைத்து இடுப்புக்கு மேல் வளைந்து தலையைத் தாழ்த்தி தங்களின் வணக்கத்தைத் தெரிவிக்கிறார்கள்'.

தென்கிழக்காசியாவில் தாய்லாந்து சிறந்த ஒரு கலாச்சாரம் மிக்க நாடு என்பதைச் சொல்லவேண்டிய அவசியமில்லை. சுற்றுப்பயணிகளை அதிகம் கவர்ந்த நாடாகவும் அது விளங்குவது அதன் பெருமையை உலகுக்குப் பறைசாற்றுகிறது. 'சுவா ஆதி' எனத் தங்கள் மொழியில் வணக்கம் தெரிவித்து இரு கரங்களையும் குவித்துக் கும்பிட்டுத் தலை வணங்கி மரியாதை செலுத்துவது தாய்லாந்து மக்களின் பழக்கம். புத்த மதத்தைச் சார்ந்த இந்த மக்களின் பழக்க வழக்கங்களில் இந்து மதத்தின் சாயல் படிந்துள்ளது குறிப்பிடத்தக்கது. தாய்லாந்து நாட்டில் ஒவ்வொரு வீட்டைச் சுற்றிலும் கால்வாயும் பாலமும் இருக்கும் பாலத்தடியில் அமர்ந்து கொண்டு வெற்றுக்கதை பேசுவது வம்பளப்பது பேசியதையே பேசிக்கொண்டிருப்பது இவர்களிடம் படிந்துள்ள ஒரு குணம்.



More papers at www.testpapersfree.com

தாய்லாந்து அரசர்கள் தமது பரம்பரைப் பெருமைகளைக் கட்டிக் காப்பதில் கண்ணும் கருத்துமாகச் செயல்படுகின்றனர். தங்களின் அரச ரத்தத்தில் வேறு ரத்தம் கலந்துவிடக் கூடாது என்ற ஒரு பாரம்பரிய நம்பிக்கையினால், தங்களின் சகோதரியையே மணந்து கொண்டிருந்தனர். இந்தப் பழக்கம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிவரை நிலவியது. சமூகவியலாரும் மருத்துவரும் இந்நிலையைக் கடுமையாகச் சாடினர். இப்போது இந்நிலை வழக்கத்தில் இல்லை.

B5. வினாக்கள்

Q21. பழக்கவழக்கங்கள் எவ்வாறு உருவாகின்றன? (4 மதிப்பெண்கள்)

____________________________________________________________

Q22. 'காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்ற பழமொழி இப்பகுதியில் சுட்டிக்காட்டப்படுவதன் நோக்கம் என்ன? (5 மதிப்பெண்கள்)

____________________________________________________________

Q23. பண்பாடு அற்றவர்கள் என்று யாரைச் சொல்லலாம்? ஏன்? (5 மதிப்பெண்கள்)

____________________________________________________________

Q24. இந்தியர்களின் பண்பாட்டைத் தாய்லாந்து மக்களும் பின்பற்றுகிறார்கள் என்பது பொருந்துமா? ஏன்? (4 மதிப்பெண்கள்)

____________________________________________________________



More papers at www.testpapersfree.com

Q25. தாய்லாந்து நாட்டில் இருந்த கலாச்சாரக் குறைபாடாக இப்பகுதியில் சுட்டிக்காட்டப்படுவது யாது? (5 மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் சொற்கள் மேற்கண்ட பகுதியில் இடம்பெற்றுள்ளன. அச்சொற்களின்

பொருளை எழுதுக.

Q26. பொருந்தாத ______ (1 மதிப்பெண்)

Q27. நிலவுகின்றன ______ (1 மதிப்பெண்)

Q28. பறைசாற்றுகிறது ______ (1 மதிப்பெண்)

Q29. சாயல் ______ (1 மதிப்பெண்)

Q30. சாடினர் ______ (1 மதிப்பெண்)

முற்றும்



More papers at www.testpapersfree.com

More papers at www.testpapersfree.com

# TESTPAPER 3

Set 3- விடைகள்

வெளிநாட்டில் பல ஆண்டுகள் ......

Q1. 2 Q2. 8 Q3. 10 Q4. 3 Q5. 6

Q6. . . பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

Q7. . . விளையாட்டு வீரர்களால் அவர்களின் வெற்றிக்கு வழிகோல முடியாது.

Q8. . . ஊழியர்களின் எண்ணம் ஆகும்.

Q9. . . காரணம், தங்களின் பிள்ளைகளைத் தீவிரவாதி ஒருவன் சுட்டுக் கொன்றதே ஆகும்.

Q10. . . அரவிந்தனின் உள்ளத்தை வாடச் செய்தது.

Q11. 8 Q12. 6 Q13. 10 Q14. 2 Q15. 7

Q16. 3 Q17. 4 Q18. 1 Q19. 4 Q20. 1

Q21. ஒன்றின் அடிப்படையில் எழுந்த செயல்கள் உருப்பெற்று நிலையாகும் போது பழக்க வழக்கங்கள் உருவாகின்றன.

Q22. பொதுவாக, காக்கை அழகுள்ள பறவையாகக் கருதப்படுவதில்லை. இருந்தாலும் அதற்கு அதன் குஞ்சு அழகுதான். அதைப் போல அறிவுக்குத் தேவையில்லாத அறிவுக்கு முற்றிலும் பொருந்தாத பழக்கவழக்கங்களாக இருந்தாலும், அவரவர்களின் கலாசாரம் அவரவர்களுக்குப் பெருமையுடையதே. இதை விளக்கவே, 'காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு' என்ற பழமொழி இப்பகுதியில் சுட்டிக் காட்டப்படுவதன் நோக்கம் ஆகும்.

Q23. வணக்கம் கூறாதவர்களைப் பண்பாடு அற்றவர்கள் என்று சொல்லலாம். மனிதர்கள் ஒருவருக்கொருவர் தங்கள் அன்பையும் நன்றியினையும் மற்றவர்களிடம் வெளிக்காட்டிக் கொள்ளுதலே வணங்குவதற்குரிய பண்பு என்பதால் பண்பாடுமிக்கச் செய்கைகளில் 'வணக்கம்' தெரிவித்தல் முதன்மையாக அமைகிறது ஆகவே வணக்கம் கூறாதவர்களைப் பண்பாடு அற்றவர்கள் என்று சொல்ல இதுவே காரணம் ஆகும்.

Q24. வெற்றுக்கதை பேசுவது, வம்பளப்பது, பேசியதையே பேசிக் கொண்டிருப்பது போன்று தாய்லாந்து மக்களிடம் படிந்துள்ள ஒரு குணம் இந்தியர்களிடமும் இருப்பதால் அவர்களும் இந்தியர்களின் பண்பாட்டைப் பின்பற்றுகிறார்கள் என்பது ஓரளவு பொருந்தும்.

Q25. தாய்லாந்து அரசர்கள் தமது பரம்பரைப் பெருமைகளைக் கட்டிக் காப்பதற்காகத் தங்களின் அரச ரத்தத்தில் வேறு ரத்தம் கலந்துவிடக்கூடாது. என்பதில் கவனமாக இருந்தனர். இந்தப் பாரம்பரிய நம்பிக்கையினால், பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிவரை அவர்கள் தங்களின் சகோதரியையே மணந்து கொண்டிருந்தனர். இதுவே, தாய்லாந்து நாட்டில் இருந்த கலாசாரக் குறைபாடாக இப்பகுதியில் சுட்டிக்காட்டப்படுவது ஆகும்.

Q26. ஏற்புடையனவாக அற்ற

Q27. வழங்குகின்றன

Q28. தெளிவாக அறிவிக்கிறது

Q29. மெல்லிய ஒற்றுமை

Q30. கடுமையாகக் குற்றம் சாட்டினர், கடுமையாகக் கண்டித்தனர்

More papers at www.testpapersfree.com

More papers at www.testpapersfree.com